## காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 26.06.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்

**பொருள் எண்:1**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளில் நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் தேந்தெடுக்கப்பட்ட சாலைகளின் இருபுறமும் உள்ள வீடுகளுக்கு இரண்டாம் பைப் லைன் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர் குழாய்களில் இணைப்புகள் வழங்கப்படாமல் இருந்து வருவதால் அப்பகுதியில் தார் சாலை பணிகள் செய்து முடித்த பின்பு வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும்போது சாலைகள் சேதமடைய வாய்ப்புள்ளதால் அப்பகுதியில் சாலை பணிகள் முடிப்பதற்கு முன்பு அப்பகுதியிலுள்ள 100 எண்ணம் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டு கொண்டுள்ள இந்நகராட்சி குடிநீர் குழாய் பொருத்துநரால் 31.05.2023–ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும், நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, அப்பகுதியிலுள்ள 100 எண்ணம் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளை புதிய குடிநீர் குழாயில் இணைப்புகள் வழங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.3,60,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்நகராட்சி பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 01.06.2023 அன்று நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. புதியதாக குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு ரூ.3,60,000/- க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர்வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 927/2023/இ1)**

**தீர்மானம் எண்.404**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- குடிநீர் வடிகால் நிதியில் செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:2**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளில் நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2022-2023-ன் கீழ் தேந்தெடுக்கப்பட்ட சாலைகளின் இருபுறமும் உள்ள வீடுகளுக்கு இரண்டாம் பைப் லைன் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர் குழாய்களில் இணைப்புகள் வழங்கப்படாமல் இருந்து வருவதால் அப்பகுதியில் தார் சாலை பணிகள் செய்து முடித்த பின்பு வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கும்போது சாலைகள் சேதமடைய வாய்ப்புள்ளதால் அப்பகுதியில் சாலை பணிகள் முடிப்பதற்கு முன்பு அப்பகுதியிலுள்ள 200 எண்ணம் வீடுகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டு கொண்டுள்ள இந்நகராட்சி குடிநீர் குழாய்

பொருத்துநரால் 31.05.2023–ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும், நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மேற்காணும் திட்டத்தில் மொகுதும் தெரு மற்றும் இதர தார்சாலைகளில் தார்தளம் மேம்படுத்தும் பணி துவங்கப்பட உள்ள நிலையில் அப்பகுதியிலுள்ள 200 எண்ணம் வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளை புதிய குடிநீர் குழாயில் இணைப்புகள் வழங்குவதற்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ரூ.7,15,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் இந்நகராட்சி பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 01.06.2023 அன்று நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. புதியதாக குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவதற்கு ரூ.7,15,000/- க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. குடிநீர்வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 928/2023/இ1)**

**தீர்மானம் எண்.405**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:3**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் இந்நகராட்சி குடிநீர் திட்டப்பணிகள் நேராய்வு செய்யப்பட்டதில் இந்நகராட்சி தலைமை குடிநீர் நீரேற்றும் நிலையம் பொன்னன்குறிச்சியிலிருந்து இந்நகருக்கு வரும் 4.43 MLD குடிநீரில் குளோரின் சேர்த்து குடிநீர் விநியோகம் செய்யும் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள அறை மிகவும் குறுகலாகவும் குளோரின் சிலிண்டர்கள் வைப்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் உள்ளதால் குளோரினேசன் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள அறையை விரிவுபடுத்தி சீரான சுகாதாரமான குடிநீர் வழங்கிடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, குளோரின் இயந்திரம் பொருத்தப்பட்டுள்ள அறையை விரிவுபடுத்தி சீரான சுகாதாரமான குடிநீர் வழங்கிடும் பொருட்டு கூடுதல் கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.4,90,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் மதிப்பீட்டிலான பணிக்குரிய செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற ஒப்புதல் பெறுவதற்கு, இந்நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. ரூ.4,90,000/-க்குரிய மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்றதலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.1038 /2023/இ1)**

**தீர்மானம் எண்.406**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- குடிநீர் வடிகால் நிதியில் செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:4**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் இந்நகராட்சி குடிநீர் திட்டப்பணிகள் நேராய்வு செய்யப்பட்டபோது, இரண்டாவது குடிநீர் திட்டத்தின் மூலம் இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் 100MM, 110MM, 140MM, 160MM அளவுள்ள D.I பகிர்மான குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்துள்ளது. மேற்காணும், திட்டத்தில் பதிக்கப்பட்ட D.I பகிர்மான குடிநீர் குழாய்களில் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப்படாமல் பழைய பகிர்மான குடிநீர் குழாய்களிலேயே தற்சமயம் வரை வீடுகளில் குடிநீர் இணைப்புகள் இருந்து வருவதால் சுகாதாரமான குடிநீர் கூடுதலாக வழங்கிடும் பொருட்டு புதிய பகிர்மான குடிநீர் குழாய்களில் மாற்றி அமைக்குமாறும் தற்சமயம் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (NSMT) கீழ் பல இடங்களில் சாலைகள் அமைக்க இருப்பதால் புதிய பகிர்மான குடிநீர் குழாய்களில் வீட்டு குடிநீர் குழாய்களை இணைக்கும் பணியினை உடனடியாக செய்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பழைய பகிர்மான குடிநீர் குழாய்களில் இணைக்கப்பட்டுள்ள வீட்டு குடிநீர் இணைப்புகளை புதிய பகிர்மான குடிநீர் குழாய்களில் மாற்றி அமைப்பதற்கு இந்நகராட்சிக்குட்பட்ட பல இடங்களில் சாலைகள் கிராசிங் செய்வதற்கும்,T-ஜாயிண்ட் மற்றும் வால்வுகள் பொருத்தி பணிகள் மேற்கொள்வதற்கு இந்நகராட்சி குடிநீர் குழாய் பொருத்துநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பணியின் அவசியம் கருதி இரண்டாவது குடிநீர் திட்டம் மூலம் பதிக்கப்பட்ட பகிர்மான குடிநீர் குழாய்களின் மூலம் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு Zoon-1 பகுதிகளில் உள்ள வீட்டுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்புகள் மற்றும் வால்வுகள் பொருத்தும் பணிக்கு ரூ.4,70,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்காணும் மதிப்பீட்டிலான பணிக்குரிய செலவீனத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற ஒப்புதல் பெறுவதற்கு, இந்நகராட்சி பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. ரூ.4,70,000/-க்குரிய மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.1040 /2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.407</u>**

- மதிப்பீடு அங்கீகரிக்கப்படுகிறது.
- குடிநீர் வடிகால் நிதியில் செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:5**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.29404/2022/SS2 நாள்.13.04.2023-ன்படி, மூலதன மானிய நிதி (Capital Grand Fund) - 2022-2023 -ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக மூடியுடன் கூடிய வடிகால் அமைக்கும் பணி (Construction of closed type water drain) ரூ.226.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.001/2022/DO1 நாள்.24.04.2023-ன்படி, தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின்படி, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பு ந.க.எண்.29404/2022/மா.தி2 நாள். 28.04.2023-ன்படி, மேற்காணும் பணிக்கு 19.05.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று அவற்றின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக இருந்ததால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது

| | | |
|---|---|---|
| 1. | திரு. K. சுந்தரபாண்டியன்,<br>த/பெ. கிருஷ்ணன்,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.01%<br>குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீடு ரேட்டை விட 4.99 %<br>கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள

பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும், பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண். 816/2022/இ1)**

**<u>தீர்மானம் எண்.408</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:6**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 18277/2022/CFC-1 நாள்.21.03.2023-ன்படி, 15வது நிதிக்குழு மான்யம் (Tied Grant) 2022-23ம் ஆண்டின் கீழ் நான்கு சக்கர இலகுரக வாகனம் (Light Commercial Vehicle) 3 எண்ணம் ரூ. 21.90 இலட்சம் மதிப்பீட்டில் விநியோகம் செய்யும் பணிக்கு 22.05.2023 அன்று மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு நான்கு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று அவற்றின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) இந்நகராட்சி ஒப்பந்தப்புள்ளி சீராய்வு குழு மூலம் (Tender Evolution Committee) ஆய்வு செய்யப்பட்டு நான்கு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக இருந்ததாக அறிக்கை செய்யப்பட்டதின்படி, நான்கு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை (Price Bid) மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. Alagambal Coach Builders,<br>10/19-CESK Complex,<br>Pudukkottai Main Road ,<br>Ayyampatti,Thiruchirappalli-620007. | மதிப்பீடு விலையை விட 0.68 % கூடுதல் |
| 2. | M/s. VEE VEE Motors,<br>No.408/13, Nagai Byepass Road,<br>Thiruvarur-610001. | மதிப்பீடு விலை |
| 3. | M/s. Sree Karpagamoorthy Automobiles,<br>Madurai Main Road,Managiri, Kovilur,<br>Karaigudi,sivaganga-630307. | மதிப்பீடு விலை |
| 4. | M/s. VP WHEELS<br>5892/2-3 ,Rajagopala Puram ,<br>Periyar Nagar,Pudukkottai -622003. | மதிப்பீடு விலையை விட 2.74 % கூடுதல் |

மேற்கண்டவாறு உள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1 & 4-ல் கண்டுள்ள M/s. Alagambal Coach Builders & M/s. VP WHEELS நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கூடுதலாகவும் வரிசை எண். 2&3-ல் கண்டுள்ள M/s. VEE VEE Motors & M/s. Sree Karpagamoorthy Automobiles நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்

மதிப்பீடு விலையில் இருப்பதால் இரண்டு நிறுவனங்களின் பணி அனுபவ சான்றிதழ்கள் மற்றும் நிதி நிலை அறிக்கைகளின்படி, சுகாதார பணிகளின் அவசரம் அவசியம் கருதி M/s. Sree Karpagamoorthy Automobiles நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. நான்கு சக்கர இலகுரக வாகனம் மூன்று (3) எண்ணம் விநியோகம் செய்தவற்கு மதிப்பீட்டு விலையில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. Sree Karpagamoorthy Automobiles நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண். 464/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.409</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:7**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/CFC-1 நாள்.10.03.2023-ன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவுதிட்டத்தின்படி, தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும், மாணவ மாணவிகளுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஓரண்டு காலத்திற்கு காலை உணவு வழங்குவதற்கு தகுதி வாய்ந்த உணவு தயாரிப்பு நிறுவனங்கள் / சுய உதவிக் குழுக்கள் / நகர அல்லது பகுதி வாரியான குழுக்கள் / தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாய சேவை குழுக்கள் ஆகியோரிடமிருந்து மதிப்பீடு ரூ.26.80 இலட்சத்திற்கு 16.05.2023-ந் தேதி இரண்டு உறை (2 cover) முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. M/s,நோ புட் வேஸ்ட்,
   No.40,1$^{st}$ தெரு, கோத்தாரி லேஅவுட்,
   சிங்கநல்லூர்,கோயம்புத்தூர்-641005.

2. M/s, கரிஸ்மா டிரேடிங் கார்ப்ரேஷன்
   No. 22//44 புள்ளிப்பாண்டி தெரு,
   ஜெய்ஹிந்த்புரம்.மதுரை-625012

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் விலை கூறல் (Price Bid) திறக்கப்பட்டு பொறியாளரால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது அதில் M/s,நோ புட் வேஸ்ட், கோயம்புத்தூர் என்ற நிறுவனத்தில் விலை விகிதம் 1.18% மதிப்பீட்டை விட குறைவாகவும், M/s, கரிஸ்மா டிரேடிங் கார்ப்ரேஷன் மதுரை என்ற நிறுவனத்தின் விலை விகிதம் 20.39% மதிப்பீட்டை விட மிகவும் குறைவாக விலை குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், முன்வைப்பு தொகையும், செலுத்தப்படவில்லை.

ஆகவே, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தரமான உணவு சுகாதாரமான முறையில் வழங்கும் பொருட்டும், நிர்வாக நலனை கருதியும், ரூ.26.80 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்வதற்கு 26.05.2023 அன்று மின்னனு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. M/s,நோ புட் வேஸ்ட்,
   No.40,1st தெரு, கோத்தாரி லேஅவுட்,
   சிங்கநல்லூர்,கோயம்புத்தூர்-641005.

2. M/s, கரிஸ்மா டிரேடிங் கார்ப்ரேஷன்
   No. 22//44 புள்ளிப்பாண்டி தெரு,
   ஜெய்ஹிந்த்புரம்.மதுரை-625012

3. SKB எண்டர்பிரைஸ்
   44/22, அர்த்தநாரி தெரு,
   சாமிநாதபுரம்,சேலம்-636009

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) இந்நகராட்சி ஒப்புந்தப்புள்ளி சீராய்வு குழு மூலம் (Tender Evolution Committee) ஆய்வு செய்யப்பட்டதில் வரிசை எண். 1&3-ல் கண்டுள்ள இரண்டு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக இருந்ததால் அறிக்கை செய்யப்பட்டத்தின்படி, இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை (Price Bid) மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s,நோ புட் வேஸ்ட்,<br>No.40,1st தெரு, கோத்தாரி லேஅவுட்,<br>சிங்கநல்லூர்,<br>கோயம்புத்தூர்-641005. | மதிப்பீடு ரேட்டை விட3.08% குறைவு |
| 2. | SKB எண்டர்பிரைஸ்<br>44/22, அர்த்தநாரி தெரு,<br>சாமிநாதபுரம்,<br>சேலம்-636009 | மதிப்பீடு ரேட்டை விட2.23% குறைவு |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s,நோ புட் வேஸ்ட், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. M/s,நோ புட் வேஸ்ட், கோயம்புத்தூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண். 454/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.410</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:8**

காயல்பட்டினம் நகராட்சிக்கு 15-வது நிதிக்குழு மானியம் (Tied Grant) 2022- 2023-ன் கீழ் ரூ.73.79 இலட்சத்திற்கு பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதனை தொடர்ந்து இந்நகராட்சியில் நடைபெறும் பயோ மைனிங் பணிக்குரிய இந்நகராட்சி பங்கு (ULB Contribution) ரூ.27.29 இலட்சம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் BOV 12 எண்ணம் மற்றும் LCV 3 எண்ணம் வாங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.45.90 இலட்சம் ஆகியவற்றை 2022- 2023 ஆம் ஆண்டு நிதி ஆண்டு 15$^{th}$ CFC நிதிக்குழு மானியம் (TIED GRANT) நிதியில் செலவினங்கள் மேற்கொள்ளவும் மீதம் உள்ள தொகை ரூ.0.60 இலட்சத்திற்கு பணிகள் தேர்வு செய்து நிர்வாக அனுமதி கோரி கருத்துரு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அலுவலக தொலைபேசி செய்தியின்படி, தேர்வு செய்யப்பட்ட கீழ்காணும் பணிக்கு நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26/2021/ஆ1 நாள்.16.05.2023-ன்படி, அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Providing Water supply arrangements to Kadayakudi MCC centre In Kayalpattinam Municipality | 0.60 |

2022- 2023 ஆம் ஆண்டு 15$^{th}$ CFC (Tied Grant) நிதியில் மேற்காணும் பணியினை செய்வதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்து இப்பணிக்கு 08.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. K. சுந்தரபாண்டியன்,<br>த/பெ. கிருஷ்ணன்,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>20,21 -வாலன் தெரு,புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.10 % கூடுதல் |
| 2. | திரு. S. ராமர் பாண்டியன்,<br>த/பெ. சுந்தர பாண்டியன்,<br>20,21 -வாலன் தெரு,புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.03 % குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. S. ராமர் பாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. திரு. S.ராமர் பாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும், பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.495/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.411</u>**

- அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:9**

காயல்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு, கதவு எண். 101, கணபதி கோவில் தெரு, வல்லநாடு தூத்துக்குடி மாவட்டம் என்ற முகவரியில் உள்ள திரு.V.A. முருகன் என்பவரால் 29.05.2023 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டது. விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி, ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

விண்ணப்பத்தினை பார்வையிட்டு திரு.V.A. முருகன் என்பவரை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.895/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.412</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:10**

காயல்பட்டினம் நகராட்சியில் ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு, கதவு எண். பழைய எண்.14A, புதிய எண். 11.2.33, நமசிவாயம் பிள்ளை தெரு, T.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் என்ற முகவரியில் உள்ள M/s. ஸ்ரீவிநாயகமுருகன் கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தால் 13.06.2023 அன்று விண்ணப்பம் செய்யப்பட்டது. விண்ணப்பத்தில் கொடுத்துள்ள விபரங்கள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின்படி, ஒப்பந்ததாரராக பதிவு செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

விண்ணப்பத்தினை பார்வையிட்டு M/s. ஸ்ரீவிநாயகமுருகன் கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தை ஒப்பந்ததாரராக பதிவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1039/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.413</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:11**

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) – 2023–2024-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 3.289 கி.மீ நீளத்திற்கு 34 எண்ணம் மண் சாலைகளை தார் சாலையாக (Earthern to BT Road) மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.233.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் (திட்ட பணிகளின் பட்டியல்) அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| S.No | Name of the Work | Length In KM | Width In M | Approvel Project Cost (Rupees in Lakhs) |
|---|---|---|---|---|
| 1. | Providing BT surface at Ekkiappa thaika street road north side 139004R071, Keela siththan street 2nd street road from west 139004R073, Billalpalli south side Ist Middle street 139005R097, North Mutharammankoil street North 1st road (south side) west side 139002R028, Visalatchiammankoil street road (Bus stand back side) Middle street road south side 139010R219, Mohadum alavudeen thottam road south side 139010R221, Pandagasalai corner East side 2nd cross street road east side 139013R257, Quithemilleth nagar North Poonthottam Link road 139015R288, Quithemilleth nagar south 1st street south extension road 139015R290, Quithemilleth nagar south 6th road south side 139015R292, Quithemilleth nagar south 7th street road south side 139015R294, Poonthottam south street road (Ammankoil back side) west side 139017R313,LR Nagar west south 3rd cross street road 139009R166,Mattukulam to sulaiman nagar 1st cross street road east 139018R335, LR Nagar west North 2nd cross street road 139009R157, LR Nagar west North 3rd cross street road 139009R158, LR Nagar west North 4th cross street road 139009R159, LR Nagar west North 5th cross street road 139009R160, LR Nagar west south 4th cross street road 139009R167, LR Nagar west south 5th cross street road 139009R168, LR Nagar south east west main road 139009R169, Koman pudur east street 1st cross street road 139002R011, Koman pudur east street 2nd cross street road139002R012, Thiruvalluvar 2nd street road from east139002R030, Kadayakudi Ist street from east139003R040, Kadayakudi 5th street from east north side 139003R045, Kadayakudi middle cross street east side 139003R047, Karpudaiyarpallivattam south street road West side 139004R068, LR Nagar East North 4th cross street road 139009R174, LR Nagar North street road(Rani Tuffs) 139009R184, Lakhsmipuram south 2nd street road from north west side 139009R193, Poonthottam North street road west side139017R307, Poonthottam Ammankoil street road west side 139017R311, Odakkarai ammankoil street road east side 139017R319 in Kayalpattinam municipality | 3.289 | 4.00 | 233.00 |
| | **Total** | **3.289** | **4.00** | **233.00** |

கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) – 2023 – 2024 ன் கீழ் ரூ.233 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்ட சாலை பணிகளுக்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள விபரம் நகர்மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) – 2023 – 2024 ன் கீழ் ரூ.233 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்ட சாலை பணிகளின் பட்டியல் மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதையும், மன்றம் அங்கீகரிக்கலாம்

**(கோப்பு எண்.669 /2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.414</u>**

- சாலை பணிகளின் பட்டியல் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:12**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண். 69/செ.ம.தொ.அ/2023 நாள்:05.05.2023 –ன்படி, காயல்பட்டினம் நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் (இரண்டாம் ஆண்டு) தினதந்தி நாளிதழில் சிறப்பு மலர் – 2023 –ல் அரசு சலுகை கட்டணத்தில் 31.05.2023-ந் தேதிய தினதந்தி செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ.23,688/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். 2324TVL371029173 நாள். 31.05.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 06.06.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.23,688/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.23,688/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1142/2019/இ1)**

**<u>தீர்மானம் எண்.415</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:13**

மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களின் கடிதம் ந.க.எண்.53/செ.ம.தொ.அ/2023 நாள்:10.04.2023 –ன்படி, காயல்பட்டினம் நகராட்சியில் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு அரசின் வளர்ச்சி திட்டம் மற்றும் சாதனைகள் (இரண்டாம் ஆண்டு) மாலை மலர் நாளிதழில் சிறப்பு மலர் – 2023 –ல் அரசு சலுகை கட்டணத்தில் 30.05.2023-ந் தேதிய மாலை மலர் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ. 18,000/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். TNL-D23050376 நாள். 30.05.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 12.06.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ. 18,000/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.18,000/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1142/2019/இ1)**

**<u>தீர்மானம் எண்.416</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள குடிநீர், கழிவறை மற்றும் வாகனங்களை சுத்தம் செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள 1HP மின் மோட்டார் பழுது ஏற்பட்டு 14.06.2023 அன்று மின்மோட்டார் காயில் எரிந்து மோட்டார் முழுவதும் பழுதாகி மின் மோட்டார் இயங்காத நிலை ஏற்பட்டுவிட்டது. இதனால் அலுவலகம் முழுவதும் தண்ணீர் வசதி இல்லாமல் மிகவும் சிரமத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் அவசரம் அவசியம் கருதி, உடனடியாக புதிய 1HP மின் மோட்டார் ஒன்று வாங்கி பொருத்துவதற்கும், தற்போது பழுதாகி இருக்கும் மின்மோட்டாரினை பழுது நீக்கம் செய்து ஸ்பேர் மோட்டாராக தயார் நிலையில் வைப்பதற்கும் இந்நகராட்சி குடிநீர் குழாய் பொருத்துநரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து பொறியாளரால் பரிந்துரை செய்யப்பட்டு இப்பணிகளுக்குரிய உத்தேச செலவினம் ரூ.20,000/- ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சி அலுவலக தண்ணீர் தேவையை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. உத்தேச செலவீனம் ரூ.20,000/-ஐ இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.1064/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.417</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:15**

காயல்பட்டினம் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் ஜெராக்ஸ் பிரிண்டிங் மிஷின் (Cannon Image Rannar-W2525) -ல் பழுது ஏற்பட்டுள்ளதால் அலுவலக கோப்புகள் ஜெராக்ஸ் மற்றும் பிரிண்டிங் எடுக்க இயலாத நிலையில், அலுவலக பணிகள் செய்வதில் தொய்வு ஏற்பட்டு வருகிறது. நிர்வாக நலனை கருத்தில் கொண்டு Cannon நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சர்வீஸ் மற்றும் விற்பனை நிறுவனம் மூலம் உடனடியாக பழுது நீக்கம் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ.35,000/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. உத்தேச செலவீனம் ரூ.35,000/-ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.997/2015/சி2)**

**<u>தீர்மானம் எண்.418</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:16**

காயல்பட்டணம் நகராட்சியில் பணிபுரிகின்ற தூய்மை பணியாளர்களுக்கு இரண்டாண்டக்கு ஒருமுறை மழைகோட் வழங்க வேண்டி உள்ளதால், இந்த ஆண்டு மேற்படி நிரந்தர தூய்மை பணியாளர்களுக்கு மழைகோட் வாங்கி வழங்கிட தகுதியான நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்திடவும், அதற்கான செலவினங்களை வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தூய்மை பணியாளர்களின் நலன் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1337/2022/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.419</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:17**

காயல்பட்டணம் நகராட்சி கடையக்குடி பகுதியில் வசித்து வருகின்ற திருமதி.இ.கிறிஸ்டி க/பெ.இருதயதாசன்(லேட்), என்பவர் தனியரை வறுமைக்கோட்டு பட்டியலில் பெயர் சேர்க்க கோரியதை தொடர்ந்து, இந்நகராட்சியின் சமுதாய அமைப்பாளர் நேரடி விசாரணை மேற்கொண்டு, மேற்படி நபர் வருவாய் ஈட்டுவதற்கு வழிவகை இல்லாத நிலையில் உள்ளதாகவும், உணவு மற்றும் இதர செலவினங்களுக்காக தனது மகளை சார்ந்துள்ளதாகவும் அறிக்கை செய்துள்ளார். மேற்படி விபரத்தினை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரும் பரிந்துரை செய்துள்ளார். எனவே மேற்படி நபர் திருமதி.இ.கிறிஸ்டி க/பெ.இருதயதாசன்(லேட்), என்பவரை வறுமைக்கோட்டு பட்டியல் வரிசை எண்.241ல் சேர்த்திடவும் அந்த விபரத்தினை மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களுக்கு தெரிவித்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.420</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:18**

காயல்பட்டணம் நகராட்சியில் கடந்த வருடங்களில், நகர்ப்பகுதிகளில் சாலைமேம்பாட்டு பணிகள் மற்றும் முள்செடிகள் அகற்றிய வகைக்கு தொகை வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண். WP(MD) No. 10711 /2014 ன் உத்தரவுபடி, தனியரின் கோரிக்கைக்கு பதில் வழங்கப்பட்டது. மேலும் தனியரால் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.463/2023ற்கு எதிராக அரசு வழக்கறிஞர் திரு.வி.நிர்மல்குமார் என்பவருக்கு வாதுரை மற்றும் இதர ஆவணங்கள் தயார் செய்த வகைக்கு கட்டணமாக ரூ.15500/- மற்றும் இது தொடர்பாக கூடுதல் அட்வகேட் ஜெனரல் திரு.ஆர். பாஸ்கரன், என்பவர் ஆஜராகிய வகை மற்றும் இதர வகைக்கு கட்டணமாக ரூ.40000/- ம் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** –

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.421</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:19**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 9514/2022/தூஇ1 நாள் 31.05.2023 ன்படி, தூய்மை நகரங்களுக்கான மக்கள் இயக்க பிரச்சாரம் தொடர்பான நிகழ்வு கடந்த 03.06.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு, கடந்த 03.06.2023 அன்றுடன் ஓராண்டு நிறைவு பெற்றதை, கடந்த 10.06.2023 அன்று மிக சிறப்பாக சிறப்பிக்கும் விதமாக, நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் நகரின் முக்கிய பிரமுகர்கள், இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சுய உதவி குழுக்கள் ஆகியோர்களை அழைத்து செயல்படுத்திடவும் அந்த நிகழ்வுகளை முறையாக ஆவணப்படுத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி நிகழ்வுகளுக்கான அனைத்து ஏற்பாடுகளுக்குமாக உத்தேச செலவினங்களை இந்நகராட்சியின் பொது நிதியில் இருந்து, நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று, இச்செலவினங்களை மேற்கொண்ட இவ்வலுவலக துப்புரவு பணி மேற்பார்வையாளர் திருமதி.லெட்சுமி, என்பரின் பெயரில் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.422</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:20**

காயல்பட்டணம் நகராட்சி மயான பகுதி சர்வே எண். 144/2, 145/2 ஆகியவற்றில் ஆக்கிரமிப்பு செய்த வகைக்கு திரு.ஜெயபாண்டி வகையரா (தற்போது இறப்பு) என்பவருக்கு நகராட்சி மூலம் அப்போது அறிவிப்பு வழங்கப்பட்டது சட்டப்படி செல்லாது என்ற மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருச்செந்தூர் உத்தரவு எண். 3/2014னை எதிர்த்து நகராட்சியால் மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கு எண். A.S.No.274/2017ல் உள்ள எதிர்வாதிகளில் சிலர் இறந்த நிலையில் அதற்கான சீர்திருத்த விபரம் பதிவு செய்ய ஆவணங்கள் தயார் செய்தது மற்றும் இதர வகைகளுக்காக நகராட்சி சார்பான அரசு வழக்கறிஞர் திருமதி.எஸ்.விஜி என்பவருக்கு வழக்கு கட்டணமாக தொகை ரூ.30000/-க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. அதில் தற்போது பகுதி தொகை ரூ.9500/-னை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண்.2647/2014/அ2)**

**<u>தீர்மானம் எண்.423</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:21**

காயல்பட்டணம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (2.O) ன்படி அனைத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன. அதன்பிரகாரம் ஒவ்வொரு நகராட்சியிலும் ODF++ மற்றும் Garbage free நகரமாகவும் GFC ரேட்டிங் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டவாறு செயல்படுத்திட, இந்நகராட்சியில் உள்ள CT,PT ஆகியவற்றினை சுத்தமாகவும், அவைகளில் உள்ள பொருட்களை பழுது நீக்கம் செய்து பராமரித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் இந்நகராட்சியின்

கடற்கரையில் உள்ள பொது கழிப்பிடத்தின் கதவு, தாழ்ப்பாள் அங்கு பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள வாளி, கண்ணாடி மற்றும் இதர பொருட்களை பழுது நீக்கம் செய்து புதிதாக வாங்கிடவும், மேற்படி பணிகளை வரும் வாரம் ODF++ குழு ஆய்வு செய்திட வருகை தர இருப்பதால், உடனடியாக செய்திடவும், அதற்கான உத்தேச செலவினங்களை நகராட்சி பொது நிதியில் இருந்து செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பொது சுகாதார நலன் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.22/2019/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.424</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:22**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் தெரு நாய்களால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் அவைகளை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடும் பணிகளை முறையாக மேற்கொண்டு அறிக்கை செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 20383/2023/எச்.1 நாள் 12.06.2023ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே காயல்பட்டணம் நகராட்சி பகுதியில் சுற்றித்திரிகின்ற தெரு நாய்களுக்கு 23-24-ம் ஆண்டில் விலங்குகள் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய்த் தடுப்பூசி செய்திட ஏற்கனவே கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டு வரும் இராஜேஸ்வரி கோசாலா டிரஸ்ட் மூலம் நகராட்சிப் பகுதியில் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினங்களை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது மக்கள் நலன் கருதி அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 1107/2023/எச்.1)**

**<u>தீர்மானம் எண்.425</u>**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:23**

காயல்பட்டினம் நகராட்சியின் அவசர அவசியத்தின் கீழ் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும், வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு;</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.426</u>**

- பிரிவு 15 பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது .

**பொருள் எண்:24**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் மே - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **இனங்கள்** | **நிலுவை & நடப்பு கேட்பு ரூ.** (**இலட்சத்தில்**) | **நிலுவை &நடப்பு வசூல் ரூ. (இலட்சத்தில்)** | **நிலுவை &நடப்பு நிலுவை ரூ. (இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 190.25 | 40.39 | 149.86 |
| 2 | காலிமனை வரி | 19.36 | 5.11 | 14.25 |
| 3 | குடிநீர் கட்டணம் | 88.48 | 13.99 | 74.49 |
| 4 | வரியற்ற இனம் | 0.43 | 0 | 0.43 |
| 5 | தொழில்வரி | 17.63 | 0.23 | 17.4 |
| 6 | SUC Charges | 18.28 | 3.14 | 15.14 |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.427</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:25**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2023 முதல் மே - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வரவினங்கள்** | | | |
|---|---|---|---|
| 110 | வரியினங்கள் | I-1 | 4572821 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 1294411 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 142000 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 600 |
| 180 | இதர வருமானம் | I-9 | 547741 |
| **மொத்தம்** | | | **6557573** |

| **செலவினங்கள்** | | | |
|---|---|---|---|
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 7739234 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 1411613 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 7492362 |
| **மொத்தம்** | | | **16643209** |
| **மொத்தம் கூடுதல் / குறைவு** | | | **10085636** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.428**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**ஓம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**

## காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில் 26.06.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானம் நகல்கள்

**பொருள் எண்.01**

காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் விநியோகப்பயன்பாட்டில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை தேவையான பணியாளர்கள் மற்றும் அதற்கான சுத்தம் செய்யும் பொருட்களை பயன்படுத்தி சுத்தம் செய்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் பம்பிங் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யப் பதிக்கப்பட்டுள்ள அனைத்து வகை குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் அதற்கு தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யும் பொழுது சிமெண்ட் சாலைகள் மற்றும் தார்சாலைகளில் ஏற்படும் பழுதுகளை அதற்கான பணியாளர்கள் மற்றும் தேவையான பொருட்களை பயன்படுத்தி சீரமைத்தல், தலைமை நீரேற்றம் நிலையத்தில் உள்ள குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளை செய்திட மின்பணியாளர் (நிலை 2) ஒரு நபர் மற்றும் உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை 2) நான்கு நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி செய்தல், நகராட்சிப்பகுதிகளில் குடிநீர் விநியோகப் பணிகளை செய்திட உதவியாளர் (மஸ்த்தூர் பணியாளர் நிலை2) ஐந்து நபர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணி செய்தல் மற்றும் காயல்பட்டினம் நகராட்சியில் குடிநீர் கட்டணம் செலுத்தாத நபர்களின் குடிநீர் இணைப்புகளை துண்டிப்பு செய்தல் போன்ற பணிகளை ஒப்பந்த பணிகள் மூலம் செய்திடவும், அதற்கான செலவினங்களை இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் இந்நகர்மன்ற தீர்மான எண். 2017 நாள் 29.05.2020 ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் பணி செய்திட திரு. டி. மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவருக்கு 06.05.2020 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி குடிநீர் விநியோகப் பணிகள் மற்றும் பம்பிங் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்ததாரரின் ஒப்பந்தக் காலத்தினை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நகர்மன்ற அனுமதி பெற்று அதன்படி வேலை உத்திரவு வழங்கப்பட்டு மேற்காணும் குடிநீர் பம்பிங் செய்யும் பணிகள், குடிநீர் விநியோகம் செய்யும் பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்பொழுது, மார்ச் 2023, ஏப்ரல் 2023 மற்றும் மே 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் செய்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.288, நாள்.28.02.2023ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே குடிநீர் பம்பிங் செய்யும் பணிகளையும் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளையும் மற்றும் குடிநீர் பராமரிப்பு பணிகளையும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவரும் திரு.டி.மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவர் மூலம் ஏற்கனவே நகர்மன்றத்தால் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தின் அடிப்படையில் பணிகளை தொடர்ந்து ஜுன்2023, ஜுலை 2023 மற்றும் ஆகஸ்ட் 2023 ஆகிய மூன்று மாதங்களுக்கு நீட்டித்து வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வருவாய் நிதியில்

மேற்கொள்ளும் பொருட்டு பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.403/2020/இ1)**

**<u>தீர்மானம் எண்.429</u>**

- குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகளின் அவசியத்தை கருத்தில் கொண்டு தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பணிகள் செய்வதற்கு அனுதிக்கப்படுகிறது
- இந்நகராட்சி குடிநீர் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:02**

காயல்பட்டினம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் இல்லாததால் கசடு கழிவு நீர் தேக்க தொட்டிகளை சுத்தம் செய்து கொண்டு செல்லவும், அப்புறப்படுத்தவும், கசடு கழிவு அகற்றும் வாகனங்கள் (Septic Tanker Vehicles) பயன்பாட்டில் உள்ளதால் மனித கழிவுகளை மனித ஆற்றலை பயன்படுத்தி அகற்றுதல் தடைசெய்தல் மற்றும் அவர்களுக்கு மாறுவாழ்வு வழங்குதல் சட்டம் 2013 –ன் பிரிவு -7 மலக் கசடுகளை அகற்றுவதற்கு மனிதர்கள் யாரையும் பயன்படுத்துவதை தடுப்பதுடன், பிரிவு -9 இச்சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக 2 முதல் 5 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் 2 முதல் 5 லட்சம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டையும் சேர்த்து தண்டிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதை பொதுமக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு 09.06.2023-ந் தேதிய மாலைமலர் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது , அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ.3465/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். TNL-D23060108 நாள். 09.06.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 19.06.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.3465/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.3465/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 785/2013/எச்1)**

**<u>தீர்மானம் எண்.430</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:03**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட குடியிருப்புகள், வணிக பகுதிகள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் 100 கிலோவிற்கு அதிகமாக கழிவுகளை உருவாக்குபவர்கள் தங்கள் வளாகத்திற்குள் உருவாகும் கழிவுகளை (Bulk Waste Generators) மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ப உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொள்ளுமாறு திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி 3(8)-ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. மாலைமலர் செய்தி நாளிதழில் 09.06.2023-ந் தேதி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது , அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ.5040/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். TNL-D23060109 நாள். 09.06.2023-ன்படியானது இந்நகராட்சிக்கு 19.06.2023 –ந் தேதி வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் விளம்பர கட்டணம் ரூ.5040/- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.5040- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 785/2013/எச்1)**

**<u>தீர்மானம் எண்.431</u>**

- அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்:04**

காயல்பட்டினம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகளை பயன்படுத்தி குப்பைகளை அகற்ற புதிய டெண்டர் விடப்பட்டு K.R. Construction, தென்திருப்பேரை நிறுவனம் 03.05.2023 முதல் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் 15.5 டன் குப்பைகளை எடைபோடுவதற்கு தற்சமயம் Weighing Bridge இல்லாததால் அவற்றை எடைபோடுவதற்கு சிரமமாக உள்ளது. எனவே, கடையக்குடி உரக்கிடங்கில் புதியதாக Weighing Bridge அமைத்திட இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு கடையக்குடி உரக்கிடங்கில் Weighing Bridge அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 943/2023/இ1)**

**<u>தீர்மானம் எண்.432</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:05**

காயல்பட்டினம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் பொது சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தி வரும் 25 BOV வாகனங்கள், 8 LCV வாகனங்கள் மற்றும் 3 HCV வாகனங்கள் உள்ளன. இந்த வாகனங்களுக்கு காற்றடைப்பதற்கு (Air Compressor) நகராட்சிக்கு வெளியில் உள்ள கடைகளுக்கு சென்று Air Compressor மூலம் காற்று நிரப்பட்டு பொது சுகாதார பணிகள் செய்யப்பட்டு வருகிறது. பொது சுகாதார வாகனங்கள் வெளியில் சென்று காற்று நிரப்புவதால் பணிகளை விரைந்து செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகராட்சி அலுவலக வளாகத்தில் புதியதாக Air Compressor இயந்திரம் ஒன்று பொருத்தும் பணி செய்து தருமாறு இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.433</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது

**ஓம்/கே.ஏ.எஸ்.முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**